**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 315/2019 |
| Name | : Vijayakumar |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.07.2026**

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் செல்லப்பம்பாளையத்தில் வசித்து நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.04.2016 ம் தேதி நான் ரூட் நெ.26 நகரப் பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்து வந்த போது சக்திவேல் என்பவர் ஓட்டுநராக இருந்தார். உடுமலைப்பேட்டை பேருந்து நிலையத்தில் இருந்து 03.30 மணிக்கு பேருந்தை எடுத்து வந்த போது ரெட்டிபாளையத்தில் 3 நபர்கள் ஏறினார்கள். நான் முன்புறம் உள்ள படியில் நின்று கொண்டிருந்ததால் அவர்களை மேலே வரச் சொன்னதற்கு வரவில்லை. ஆஜர் எதிரி முத்துக்குமாரை அதற்கு அடுத்த பேருந்து நிறுத்தம் வாய்க்கால் பாலம் அருகே இறக்கிவிட்டுவிட்டோம். மற்ற இரண்டு ஆஜர் எதிரிகள் மடத்துக்குளத்தில் இறங்கிவிட்டார்கள். இரவு 07.30 மணிக்கு மடத்துக்குளத்தில் இருந்து பேருந்தை எடுத்து உடுமலை சென்ற போது ரெட்டிபாளையம் அருகே வரும் போது 3 பேர் பேருந்தை நிறுத்தி முன் படி வழியாக மேலே ஏறி வந்து ஓட்டுநரை அடித்தார்கள். ஓட்டுநருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. மூன்று பேரும் இறங்கிச் சென்றுவிட்டார்கள். பேருந்தை அங்கேயே நிறுத்திவிட்டு ஓட்டுநரை மடத்துக்குளம் அரசு

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். இது சம்மந்தமாக மறு நாள் சக்திவேல் புகார் கொடுத்த போது நான் உடன் இருந்தேன். 22.04.2016 ம் தேதி மதியம் 02.30 மணி அளவில் போலீசார் உடுமலை பேருந்து நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் சம்பவத்தின் போது 6 மாதமாக அந்த பேருந்தில் வேலை செய்து வந்தேன். 21.04.2016 ம் தேதி பேருந்தில் ஓட்டுநராக இருந்தது சக்திவேல் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் மூவரும்அன்று எந்த பேருந்து நிறுத்தத்தில் ஏறினார்கள் என்றால் ரெட்டிபாளையத்தில் ஏறினார்கள். மது போதையில் இருந்தார்களா என்றால் இல்லை. குறிப்பிட்டு யார் கெட்டவார்த்தை பேசினார்கள் என்றால் சரியாக தெரியவில்லை பேசியது கேட்டது. ஆஜர் எதிரிகள் மூவரையும் நாங்கள் தான் இறக்கிவிட்டோம். எதற்காக இறக்கிவிட்டோம் என்றால் அந்த சமயத்தில் பள்ளி மாணவர்கள் வருவார்கள் என்பதால் மேலே ஏறி வரச்சொன்னேன் அதில் ஆஜர் எதிரி முத்துக்குமார் மட்டும் மேலே ஏறி வரவில்லை மற்ற இருவரும் மேலே ஏறிவிட்டார்கள். அவரை மட்டும் கீழே இறக்கிவிட்டேன்.

(2) சக்திவேலை விசாரிக்கும் போது நான் உடன் இல்லை புகார் கொடுக்கும்போது உடன் இருந்தேன். ஆஜர் எதிரிகள் மூவரும் சக்திவேலை தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி சரியாக பார்க்கவில்லை என்றும் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவத்தின்போது 26 ரூட் பேருந்தில் எத்தனை மாதமாக வேலை செய்தேன் என்றால் 3 மாதமாக வேலை செய்தேன். (சாட்சி வேண்டுமென்றே கேள்விகளுக்கு மாறி, மாறி பதில் அளிப்பதை வாடிக்கையாக வைத்திருந்தார்). பேருந்தில் சம்பவ சமயத்தில்

கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். முன்னால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஓட்டுநர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.30 17:20:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்